Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Tenkasi

Calendar of cases tried by the Judicial Magistrate of Tenkasi.

| Date of offence | Date of Report of complaint | Remand or surrender of accused | Release on bail | Commen ce ment of trial | close of trial | Sentence of order |
|---|---|---|---|---|---|---|
| 26.09.2019 | 26.09.19 | A1 26.09.19<br>A2 10.10.19 | A1 01.10.19<br>A2 10.10.19 | 10.10.22 | 26.02.26 | 06.03.26 |
| C.S.D.21.10.19 | Explanation of Delay and Remarks: NIL | | | | | |
| C.S.F.D.20.12.21 | | | | | | |
| D.Cogni.20.12.21 | | | | | | |
| A.P.D. 10.10.22 | | | | | | |

Judgment in CC 167/2021 on the file of the Judicial Magistrate of Tenkasi.

Complainant: The Sub Inspector of Police, Pavoorchatram P.S in Cr.No.422/2019

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| 1)Chithirai Selvan<br>2)Ivarani | 1989<br>1965 | Mookkan<br>Mookkan |

| Caste or Religion | Calling | Residence | Police Station |
|---|---|---|---|
| Hindu | Coolie | Panayadi Patti | Pavoorchatram |

**Offence** : Section 294(b), 323, 506(2) IPC, Sec.4 of TNPHW Act

**Sentence** : A1 is found not guilty U/s 294(b), 323, 506(2) IPC, Sec.4 of TNPHW Act; A2 is found not guilty U/s 294(b), 323, 506(2) IPC and the accused are acquitted U/s 248(1) of Crpc.,

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.06 17:05:43 +0530

Judicial Magistrate,
Tenkasi.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை: திருமதி.எஸ்.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் மார்ச் திங்கள் 6 ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 167/2021
CNR.No.TNTS02-002395-2021

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
பாவூர்சத்திரம் கா.நி.கு.எண் 422/2019 ... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. சித்திரை செல்வன், 1989,
த.பெ.மூக்கன்,
காளியம்மன் கோவில் தெரு,
பணையடிப்பட்டி

2. ஜவராணி, 1965,
த.பெ.மூக்கன்,
காளியம்மன் கோவில் தெரு,
பணையடிப்பட்டி ... எதிரிகள்

இவ்வழக்கு 20.12.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சிவபத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

விரோதம் காரணமாக, 26.09.2019 ம் தேதி காலை 7 மணிக்கு சாட்சிகள் பாப்பா மற்றும் ஞானசுந்தரி பணையடிப்பட்டியில் உள்ள சாட்சி ஞானசுந்தரியின் வீட்டு முன்புள்ள பொதுவழிப்பாதையில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரிகள் சாட்சி ஞானசுந்தரியைப் பார்த்து பொதுயிடத்தில் வைத்து வயதான பெண் என்றும் பாராமல் ஏ கிளட்டு தேவிடியா, செறுக்கி, புண்டாமவளே, வீட்டை எங்களுக்கு தராமல் நீ வேற ஒரு பயலுக்கு எப்படி பேசி முடிக்கலாம் என்று அசிங்கமாக பேசி அவமானத்தை

ஏற்படுத்தியதாகவும், 1ம் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து சாட்சி ஞானசுந்தரியின் தலையிலும் வலது கையிலும் மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி கையால் சாட்சி ஞானசுந்தரியின் முதுகில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்திவிட்டு 1,2ம் எதிரிகள் சாட்சி ஞானசுந்தரியைப் பார்த்து கூதிமவளே, எங்களுக்கு வீடு தராமல் வேறு யாருக்கு நீ வீட்டை கொடுக்கிறனு பார்க்குறோம், என்னைக்கு நாளும் எங்க கையால் தான் உனக்கு சாவு என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரிகள் மீது பாவூர்சத்திரம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள். இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில், எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்றுப்பொருள்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 26.09.2019 ம் தேதி 11.00 மணிக்கு முதல்நிலைக் காவலர் சுதா என்பவர் நிலையப் பொறுப்பில் இருந்த போது தென்காசி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஞானசுந்தரி என்பவரது மகள் பாப்பா என்பவரிடம் புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதன் பின் நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.422/2019, இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 மற்றும் முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.4 என்றும், அதன்பின்னர், வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட விசாரணை அதிகாரி 26.09.2019 ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வராஜ் மற்றும் சிவனனைந்த பெருமாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், அதன்பின்னர், சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில், 1 ம் எதிரியை 26.09.2019 ம் தேதி 16.00 மணிக்கு செட்டியூரில் வைத்து கைது செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், 2 ம் எதிரி திருநெல்வேலி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்றுவிட்டதால் கைது செய்யவில்லை என்றும், பின்பு காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த தென்காசி அரசு மருத்துவமனை மருத்துவர் சம்மா என்பவரை விசாரித்து காயச்சான்று அ.சா.ஆ.7 பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு, இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய

போது எதிரிகள் பொய்ச்சாட்சி என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா ? என்று வினவிய போது, எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரிகள், அ.சா.1யை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், மேற்படி குற்றச்சாட்டானது அ.சா.1 முதல் அ.சா.3 வரையுள்ள சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

<u>9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், அப்படி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரிகளுக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>10. தீர்வு</u> –

26.09.2019ம் தேதி காலை 7 மணிக்கு சாட்சிகள் பாப்பா மற்றும் ஞானசுந்தரி பனையடிப்பட்டியில் உள்ள சாட்சி ஞானசுந்தரியின் வீட்டு முன்புள்ள

பொதுவழிப்பாதையில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த எதிரிகள் சாட்சி ஞானசுந்தரியைப் பார்த்து பொதுயிடத்தில் வைத்து வயதான பெண் என்றும் பாராமல் ஏ கிளட்டு தேவிடியா, செறுக்கி, புண்டாமவளே, வீட்டை எங்களுக்கு தராமல் நீ வேற ஒரு பயலுக்கு எப்படி பேசி முடிக்கலாம் என்று அசிங்கமாக பேசி அவமானத்தை ஏற்படுத்தியதாகவும், 1ம் எதிரி கீழே கிடந்த கம்பை எடுத்து சாட்சி ஞானசுந்தரியின் தலையிலும் வலது கையிலும் மாறி மாறி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரி கையால் சாட்சி ஞானசுந்தரியின் முதுகில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்திவிட்டு 1,2ம் எதிரிகள் சாட்சி ஞானசுந்தரியைப் பார்த்து கூதிமவளே, எங்களுக்கு வீடு தராமல் வேறு யாருக்கு நீ வீட்டை கொடுக்கிறனு பார்க்குறோம், என்னைக்கு நாளும் எங்க கையால் தான் உனக்கு சாவு என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே, போலிசாரிடம் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

11. எதிரிகளின் மீதான குற்றச்சாட்டானது அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பார்க்கும் போது, புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், பட்டியல் சாட்சி.2 ஞானசுந்தரி தன் அம்மா, அவர் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாகவும், தன் அம்மா இறப்பை தான் பதிவு செய்யவில்லை என்றும், சாட்சி முருகன் தன் கணவர், கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுக்கும் தன் அம்மாவுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது என்றும், தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கையொப்பம் தன்னுடையதுதான், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று தனக்கு தெரியாது என்றும், எதிரிகள் தன் அம்மாவை அசிங்கமாக பேசவில்லை, அடித்துக் காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தன் மாமியாரின் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றும், அ.சா.1 பாப்பா தன் மனைவி, பட்டியல் சாட்சி.2 ஞானசுந்தரி தன் மாமியார் என்றும், அவர் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு

இறந்துவிட்டதாகவும், இந்த வழக்கை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.ஆ.2 அறிவேன் சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் போது, எதிரிகள், புகார்தாரரை அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்ததாக முன்னிலைப்படுத்தப்பட்ட அரசு தரப்பு வழக்கு வெகுவாக பாதிக்கிறது. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட போதிலும் அரசு தரப்புக்கு ஆதரவாக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

13. இந்த வழக்கில், அ.சா.3 தனது சாட்சியத்தில், அ.சா.1 னிடம் புகார் மனு பெறப்பட்டு, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, புலன் விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது ஆகியவற்றை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் இருப்பதால் அ.சா.3 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகள் குற்ற செயல்களில் ஈடுபட்டார் என்றோ அல்லது எதிரிகளுக்கு எதிரான அசிங்கமாக பேசி, அடித்துக் காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று முடிவுக்கு வர முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரிகள் குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

15. முடிவில், 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2)ன் கீழும் குற்றவாளி இல்லை என்று முடிவு

செய்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16. இவ்வழக்கின் 1ம் எதிரி கடந்த 26.09.2019ம் தேதியன்று கைது செய்யப்பட்டு, கடந்த 01.10.2019ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 2ம் எதிரி திருநெல்வேலி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று கடந்த 10.10.2019ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

**17. வழக்குச் சொத்து –**

இந்த வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் மார்ச் திங்கள் 6ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI
Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.06 17:05:52 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | பாப்பா |
| அ.சா.2 | முருகன் |
| அ.சா.3 | திரு.சேகனா, உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம் | 26.02.2026 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.2ன் அறிவேன் சாட்சி கையொப்பம் | 26.02.2026 | அ.சா.ஆ.2 | அ.சா.2 | அசல் |
| 3 | புகார் வாக்குமூலம் | 26.02.2026 | அ.சா.ஆ.3 | அ.சா.3 | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | முதல் தகவல் அறிக்கை | 26.02.2026 | அ.சா.ஆ.4 | அ.சா.3 | அசல் |
| 5 | பார்வை மகஜர் | 26.02.2026 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் | 26.02.2026 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| 7 | காயச்சான்று | 26.02.2026 | அ.சா.ஆ.7 | அ.சா.3 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள் –** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள் –** இல்லை.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.06 17:05:58 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>குறிப்பு</u> :–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.